# முன்னாள் படைவீரர்களுக்கான கையேடு

முன்னாள் படைவீரர் நல இயக்ககம்,
சென்னை – 3

இணையதள முகவரி: www.tn.gov.in/exwel
மின் அஞ்சல் முகவரி : exweldte@tn.gov.in

2012 – 2013

**படைப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் செய்ய வேண்டியது என்ன ?**

| |
|---|
| மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் வழங்கப்படும் அடையாள அட்டை பெற வேண்டும். |
| கேண்டீன் ஸ்மார்ட் கார்டு பெற வேண்டும். |
| வேலை வாய்ப்பிற்கு பதிவு செய்திட வேண்டும். |
| தமிழ் நாடு முன்னாள் படைவீரர் கழகத்தில் பெயர் பதிவு செய்திட வேண்டும் |

<u>அடையாள அட்டைபெறுவதற்கு</u>

- **படைப்பணி விலகல் சான்று**
- **ஓய்வூதிய ஆணை**
- **மூன்று ஸ்டாம்ப் கலர் புகைப்படம்** ஆகியவற்றுடன்மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை அணுகவும்

<u>கேண்டீன் அட்டை பெறுவதற்கு</u>

- **படைவிலகல் சான்று**
- **ஓய்வூதிய ஆணை**
- **மனைவியுடன் இணைந்து எடுக்கப்பட்ட புகைப்படம்–4**
- **தனி புகைப்படம்** ஆகியவற்றுடன் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை அணுகவும்.

<u>வேலை வாய்ப்பிற்கு பதிவு செய்வதற்கு</u>

- **முன்னாள் படைவீரரின் அடையாள அட்டை (பெற்ற பிறகு)**
- **கல்வி சான்றுகள்,**
- **சாதி சான்று**
- **குடும்ப அட்டை** ஆகியவற்றுடன் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை அணுகவும்.

முன்னாள் படைவீரர் நல அலுவலக சிறப்பு வேலை வாய்ப்பு பிரிவில் தங்களது பெயர் பதிவு செய்யப்பட்டு பதிவு அட்டை வழங்கப்படும். முன்னாள் படைவீரர்களுக்கு சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வேலைவாய்ப்பு கேட்புகளுக்கு பெயர் பரிந்துரைக்கப்படும்.

இப்பிரிவின் இரண்டாம் நிலை அட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு அங்கும் பெயர் பதிவு செய்து இரண்டாம் நிலை பதிவு எண் வழங்கப்படும்.

இராணுவத்தில் சிறப்பு பயிற்சி பெற்றவர்கள், அதற்கான சான்றிதழ்களுக்கு தனியே பதிவு செய்தல் வேண்டும். PT, Drill, Bomb Disposal, NBC, Commando போன்ற பயிற்சி மற்றும் NSG, RR-ல் பணிபுரிந்தவர்கள்.

# முன்னாள் படைவீரர் என்பவர் யார்?

1. **30.06.1968–க்கு முன்னர்:**
முன்னாள் படைவீரர் என்பவர் முப்படைகளில் எந்த ஒரு பதவியிலோ (Rank) (Combatant அல்லது Non-Combatant) பணிபுரிந்திருக்க வேண்டும். பணியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டவராகவோ, திறமையற்ற காரணங்களினால் விடுவிக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

2. **01.07.1968 முதல் 30.06.1979 வரை**
முன்னாள் படைவீரர் என்பவர் முப்படைகளில் எந்த ஒரு பதவியிலோ (Rank) (Combatant அல்லது Non-Combatant) குறைந்த பட்சம் ஆறு (6) மாதம் சேவை புரிந்திருக்க வேண்டும். பணி நீக்கம் செய்யப்பட்டவராகவோ, திறமையற்ற காரணங்களினால் விடுவிக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

3. **01.07.1979 முதல் 30.06.1987 வரை**
முன்னாள் படைவீரர் என்பவர் முப்படைகளில் எந்த ஒரு பதவியிலோ (Rank) (Combatant அல்லது Non-Combatant) குறைந்த பட்சம் ஆறு (6) மாதம் சேவை புரிந்திருக்க வேண்டும். பணியிலிருந்து சொந்த விருப்பத்தில் வெளி வந்திருந்தாலோ, பணி நீக்கம் செய்யப்பட்டவராகவோ இருத்தல் கூடாது. சொந்த விருப்பத்தில் ஐந்து (5) ஆண்டுகள் பணிமுடித்த பின்னர் பணியிலிருந்து விலகி வந்தவர் தகுதியுள்ளவர்.

4. **01.07.1987–ற்கு பின்னர்**
முன்னாள் படைவீரர் என்பவர் முப்படைகளில் எந்த ஒரு பதவியிலோ (Rank) (Combatant அல்லது Non-Combatant) பணிபுரிந்து ஓய்வூதியத்துடன் விடுவிக்கப்பட்டவர், வரையறுக்கப்பட்ட பணிக்காலம் (completion of terms of engagement) முடிந்து பணிக்கொடையுடன் விடுவிக்கப்பட்டவர்கள். பணியிலிருந்து சொந்த விருப்பத்தில் வெளி வந்திருந்தாலோ, பணி நீக்கம் செய்யப்பட்டவராகவோ, திறமையற்ற காரணங்களினால் விடுவிக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

பிராந்தியப் படையில் பணியாற்றி தொடர்ச்சியான சேவை புரிந்து ஓய்வூதியம் பெறுபவர்கள், ஊனம் படைப்பணியால் ஏற்பட்டு இயலாமை ஓய்வூதியம் பெறுபவர்கள், 15.11.1986 அன்று அதற்கு பின்னர் வீரவிருது பெற்றவர்கள் முன்னாள் படைவீரர்களாக கருதப்படுவார்கள்.

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் உதவிகள்**

| திட்டம் | பெறத்தகுதி |
|---|---|
| **திருமண நிதி உதவி**<br>முப்படை வீரரின் குடும்பத்திற்கு ஒரு மகளுக்கு மட்டும் ரூ.8000/– திருமண நிதி உதவி | மணமகள் திருமணநாளன்று 21 வயது பூர்த்தி செய்தவராகவும் 8–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும் இருந்தால் திருமணப் பத்திரிக்கை மற்றும் கல்வி, வயது சான்றுகளுடன் விண்ணப்பிக்கலாம். இதற்கு இளநிலைப்படை அலுவலர் வரை வருமான வரம்பு கிடையாது |
| **வயது முதிர்ந்தோர்க்கான உதவிகள்** | |
| வயது முதிர்ந்தோர்க்கான நிதி உதவியாக மாதம் ரூ.500/ ஆயுள் முழுவதும் பெறலாம் | 60 வயதிற்கு மேற்பட்ட ஓய்வூதியம் ஏதும் பெறாதோர் வேலை மற்றும் சுயதொழில் செய்து பிழைக்க வழியற்று வறிய நிலையில் உள்ளோர் வருமானம் மற்றும் வயது சான்றுடன் விண்ணப்பிக்கலாம் |
| ‘நிம்மதி ‘முதியோர் இல்லத்தில் தங்க வசதியுடன் பராமரிப்பு தொகை ரூ.1000/– வழங்கல் | ஆதரவற்ற விதவையர் மற்றும் முன்னாள் படைவீரர்கள் தகுதியுடைவர் ஆவர். |
| **உடல் நலிவுற்றோருக்கும் இயலாதவருக்குமான நிதி உதவிகள்** | |
| மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறுபவருக்கு நாளொன்றுக்கு ரூ.50/– மற்றும் ஆண்டொன்றுக்கு சொந்த ஊருக்குச் சென்று வர பயண கட்டணம் | முன்னாள் படைவீரர்கள் காசநோய், தொழுநோய், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட உள்நோயாளிகளுக்கு மட்டும் மருத்துவமனையிலிருந்து மாவட்ட அலுவலர்களால் மருத்துவமனைக்கு நேரில் சென்று வழங்கப்படும். |
| **புற்று நோயால் பாதிக்கப்பட்டோருக்கு மாதம் ரூ.1000/–** வீதம் ஆயுட்காலம் வரை | சிகிச்சை பெற்று வரும் முன்னாள் படைவீரர் அவர்தம் மனைவி மற்றும் விதவையர்கள் |
| **தொழுநோயால் பாதிக்கப்பட்டோருக்கு மாதம் ரூ.800/–** வீதம் ஆயுட்காலம் வரை | முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்கள் |
| **தொழுநோயாளிகளுக்கு தீபாவளி பண்டிகையின் போது ரூ.1000/–** க்கான பரிசுப்பொருட்கள் | முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்கள் |

| திட்டம் | பெறத்தகுதி |
|---|---|
| **பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவருக்கு மாதம் ரூ.800/–** வீதம் ஆயுட்காலம் வரை | முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்கள் |
| **இரு கண்களிலும் பார்வை இழந்தோருக்கு மாதம் ரூ.800/–** வீதம் ஆயுட்காலம் வரை | முன்னாள் படைவீரர் மற்றும் விதவைகள் |
| **காசநோயால் பாதிக்கப்பட்டோருக்கு மாதம் ரூ.800/–** வீதம் குணமாகும் வரை | முன்னாள் படைவீரர் மற்றும் விதவையர்கள் |
| **செயற்கை உபகரணங்களான பல்செட், கண் கண்ணாடி, காது கேட்கும் கருவிகளுக்கு தலா ரூ.3000/–** வழங்கல் | முன்னாள் படைவீரர்கள்/ விதவைகளுக்கு (கண்ணாடி மட்டும்) |
| **பூனாவில் உள்ள ராணி மேரி தொழிற்பயிற்சி பள்ளியில் பயிலும் ஊனமுற்ற படைவீரர்களுக்கு பயிற்சி உதவி தொகையாக மாதம் ரூ.900/–** வழங்குதல் | தமிழ் நாட்டைச் சேர்ந்த ஊனமுற்ற முன்னாள் படை வீரர்கள் |
| **மனநோய் மற்றும் மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கு மாதந்தோறும் பராமரிப்பு மானியமாக ரூ.800/–,** விடுதியில் தங்கி சிகிச்சை பெறுபவர்களுக்கு பாராமரிப்பு மானியம் ரூ.300/–, மருத்துவமனை செலவிற்கான கைப்பணம் ரூ.100/– மற்றும் மருந்து செலவு ரூ.200/– பிரதி மாதம் அதிகபட்சம். | முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் |
| **பக்கவாத நோய் மற்றும் இருகண்களிலும் பார்வை இழந்தோருக்கு ரூ.500/–** வீதம் மாதந்தோறும் ஆயுட்காலம் வரை | முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் |

| திட்டம் | பெறத்தகுதி |
|---|---|
| **இடர்கால நிதியுதவிகள்** | |
| ஈமச்சடங்கு நிதியுதவியாக ரூ.3000/– | முன்னாள் படைவீரர் இறப்பிற்கென வழங்கப்படுவது. |
| வெள்ளம், தீவிபத்து மற்றும் இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் இழப்பு (வீடு இடிபாடு)க்காக ரூ.15,000/– வழங்கப்படும் | முன்னாள் படைவீரர்கள்/ விதவையர்கள் |
| முன்னாள் படைவீரர்களின் ஆதரவற்ற சிறார்களுக்கான கல்வி உதவித் தொகையாக அனைத்து கட்டணங்கள், நோட்டு புத்தங்கள், சீருடைகள் மற்றும் பள்ளி பயில்வோருக்கு மாதம் ரூ.50/–, கல்லூரி பயில்வோருக்கு மாதம் ரூ.100/– கைச்செலவாக வழங்கப்படும். | 21 வயதிற்குப்பட்ட அனாதரவான சிறார்களுக்கு வழங்கப்படுகிறது |
| **அறுவைச் சிகிச்சைக்கான சலுகைகள்** | |
| இருதய, சீறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கான நிதியுதவியாக ரூ.50,000/– வழங்கப்படும் | இராணுவ மருத்துவமனை அல்லது மருத்துவ கல்வி இயக்குநரால் சான்றுரைக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை உதவி பெற முன்னாள் படைவீரர் தகுதியுடையவர் ஆவர். (ECHS உறுப்பினர் அல்லாதவர்களுக்கு மட்டும்) |
| **இலவச பயிற்சி** | |
| தையற் பயிற்சி நிலையங்கள் மூலமாக பயிற்சி மற்றும் இலவச தையல் இயந்திரத்துடன் நாளொன்றுக்கு ரூ.20/– உடன் மாதந்தோறும் ரூ.500/– கச்சா பொருட்களுடன் வழங்கப்படுகிறது. | முன்னாள் படைவீரரின் மகள்களுக்கு ரூ.1500/– மானியத்துடனான தையல் இயந்திரமும், விதவையருக்கு இலவச தையல் இயந்திரமும் வழங்கப்படுகிறது |
| **வரிச் சலுகைகள்** | |
| மாநாகராட்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் விதிக்கப்படும் வீட்டு வரி தொகை மீளப்பெறுதலிலிருந்து விலக்கு | வீரதீர செயல் புரிந்து சக்ரா விருதுகள் பெற்ற முன்னாள் படைவீரர்கள் மற்றும் இராணுவ குடும்ப ஓய்வூதியம் பெறும் விதவைகள் |
| **ஆயுட்கால நிதியுதவி** | |
| இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்த முன்னாள் படைவீரர் மற்றும் விதவையர்களுக்கு மாதம் ரூ.1000/– மற்றும் ரூ.800/– முறையே வழங்கப்படுகிறது. | மாத வருமானம் ரூ.500/– மிகாமல் மறுவேலை வாய்ப்பு பெறாமல் பணிகொடையும் பெறாத முன்னாள் படைவீரர்கள் |

## சுய தொழில் மானியம் , வேலைவாய்ப்பு பயிற்சி

### முன்னாள் படைவீரர் மற்றும் விதவையருக்கான கடன் சலுகைகள்

சுயதொழிலுக்கான தனிநபர் கடனுக்கு அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை 75% வட்டி மானியம் வழங்கப்படும்.

சுய உதவி குழுக்கள் தொழிற் கடனாக பெறும் அதிகபட்சம் ரூ.7.5 இலட்சம் வரை 100% வட்டி மானியம் வழங்கப்படும்

தொழிற்கூடம் அமைக்க விரும்பும் சுய தொழில் புரியும் முன்னாள் படைவீரர் மற்றும் முன்னாள் வீரரை பெருபான்மை பங்குதாரராக கொண்ட கூட்டமைப்பிற்கும் 25% தொழிற்கூட மானியம் அதிகபட்சமாக ரூ.50,000/– வரை வழங்கப்படும்.

### முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கான பயிற்சி உதவித் தொகை

ஆசிரியர் பயிற்சி மற்றும் வாகன ஓட்டுனர் பயிற்சிகளுக்கு முன்னாள் படைவீரர் மற்றும் அவரை சார்ந்தோருக்கு ரூ.1250/– முதல் ரூ.1500/– வரை வழங்கப்படுகிறது. மேலும் தொழில் தொடர்பான பயிற்சிகளை விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

### வேலைவாய்ப்பிற்கான பயிற்சிகள்

முன்னாள் படைவீரர் உடற்கல்வி பயிற்றுனராக மறு வேலைவாய்ப்பு பெறும் பொருட்டு SSLC தேர்ச்சி பெற்ற, படைப்பணியின்போது உடற்கல்வியில் அடிப்படை பயிற்சி பெற்றோருக்கு சிறப்பு புத்தாக்க பயிற்சி, காவலர் பணியில் பயிற்சி , இராணுவத்தில் சேரும் இளைஞர்களுக்கான பயிற்சி, மத்திய புனரமைப்பு இயக்கக மூலம் வழங்கப்படும் ஆட்டோமொபைல், கோழி வளர்ப்பு, கணிப்பொறி பழுது பார்த்தல் உள்ளிட்ட பயிற்சிகள், , கால்நடை ஆய்வாளர் பயிற்சி தமிழ் நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளுக்கான பயிற்சி உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகிறது

### சுய வேலைவாய்ப்பிற்காக மத்திய அரசின் நிதியுதவி

முப்படைவீரர் மற்றும் விதவையருக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் பண்ணை மற்றும் பண்ணைசாரா தொழில்களுக்கு ரூ.10 இலட்சம் வரை கடன் வழங்கப்படுகிறது.

கதர் மற்றும் கிராம தொழில் ஆணையம் மூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் ரூ.10 இலட்சம் வரை கடன் வழங்குகின்றன.

## முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கான கல்வி உதவித்தொகைகள்

### பள்ளிக் கல்வி

பள்ளிக் கல்வி பயிலும் முன்னாள் படைவீரர் சிறாருக்கு ஆண்டொன்றிற்கு ரூ.500- முதல் ரூ.1500/- வரை வழங்கப்படுகிறது.

போரில் உயிர் நீத்தோர் மற்றும் உடல் ஊனமுற்றோரின் சிறார்களுக்கு பள்ளிக் கல்வி சிறப்பு உதவியாக சீருடை, புத்தப்படி உள்ளிட்ட உதவித் தொகையாக ஆண்டொன்றிற்கு ரூ.1000/– முதல் ரூ.1500/– வழங்கப்படுகிறது

### மேற்படிப்பு

கலை மற்றும் அறிவியல் கல்லுரியில் பயிலும் முன்னாள் படைவீரர்களின் மகன் மற்றும் மகள்களுக்கு ரூ.2000/– முதல் ரூ.2500/– வரை வழங்கப்படுகிறது.

தொழில் / தொழில்நுட்ப கல்விகளில் பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்புகளுக்கு ரூ.10,000/-ம், பட்டய படிப்புகளுக்கு ரூ.7500/-ம், சான்றிதழ் படிப்புக்கு ரூ.2500/-ம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது

### விடுதிக்கட்டணம்

விடுதிக்கட்டணமாக விடுதியில் தங்கி படிப்போருக்கு அதிகபட்சமாக ரூ.4000/- ஒரு ஆண்டிற்கு வழங்கப்படும்.

### ஒதுக்கீடு

முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்காக விவசாய, பொறியியல், மருத்துவ கல்லூரிகளிலும், தொழிற்கல்வி நிலையங்களிலும், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் செவிலியர் பயிற்சி கல்வி நிலையங்களில் சிறப்பு ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## முன்னாள் படைவீரர்களுக்காக வேலைவாய்ப்பில் அரசு வழங்கும் சலுகைகள்

முன்னாள் படைவீரர்கள் முன்னுரிமையினை துய்க்காத பட்சத்தில், அவரின் ஒரு வாரிசுற்கு மாநில அரசு பணியில் வேலை வாய்ப்புக்கு முன்னுரிமைச் சான்று வழங்கப்படும்.

**வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு**

| | பிரிவு சி | பிரிவு டி |
|---|---|---|
| மத்திய அரசு | 10% | 20% |
| மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் | $14^{1}/_{2}$% | $24^{1}/_{2}$% |
| மாநில அரசு | 5% | 10% |
| மாநில சீருடை பணி | 5% | – |
| மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் | Nil | 10% |
| வனத்துறை காவலர் | 10% | Nil |
| வனத்துறை ஊழியர் | Nil | 5% |
| **NCC**, ஓட்டுநர், லஸ்கர், காவலர் | 25% | – |
| கால்நடை ஆய்வாளர் | 5% | – |

## போரில் உயிர்நீத்த முன்னாள் படைவீரர் விதவையர் மற்றும் போரில் ஊனமுற்ற படைவீரர்களுக்கான சிறப்புச் சலுகைகள்

1. கருணைத் தொகையாக விதவையருக்கு ரூ.50,000/– ஒரு முறை வழங்கப்படுகிறது.
2. கருணைத்தொகையாக ஊனமுற்றோருக்கு ரூ.30,000/– ஒருமுறை வழங்கப்படுகிறது.
3. விதவையருக்கும், ஊனமுற்றோருக்கும் ஆயுட்கால வருடாந்திர பராமரிப்பு மானியமாக ஆண்டொன்றிற்கு ரூ.12000/– வழங்கப்படுகிறது
4. வீடு கட்டும் மானியமாக ரூ.50,000/– ஒருமுறை வழங்கப்படுகிறது
5. மகள்களின் திருமணத்திற்காக ரூ.25,000/– வழங்கப்படுகிறது

| <u>இதர சலுகைகள்</u> | |
|---|---|
| 1. | மறு ஆய்வு மருத்துவ குழு (Resurvey Medical Board) ஆய்விற்கு செல்ல 15 நாட்கள் சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்கப்படும். |
| 2. | மனுக்களில் நீதிமன்ற வில்லை ஒட்டுதலில் விலக்கு |
| 3. | அரசு மருத்துவ மனைகளில் முன்னாள் படைவீரர்களுக்கு மருத்துவ சிகிச்சையில் சலுகை வழங்கப்படுகிறது. |
| 4. | தமிழ்நாட்டில் 18 அரசு வட்ட தலைமை மருத்துவமனைகளில் முன்னாள் படைவீரர்களுக்கான 12 படுக்கைகள் கொண்ட தனிப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. |
| 5. | அரசு காசநோய் மருத்துவமனைகளான திருச்சி, சென்னை–தாம்பரம், பெருந்துறை, ஆசாரிபள்ளம் (கன்னியாகுமரி) ஆகியவற்றில் முன்னாள் படைவீரர்களுக்கு 10 படுக்கைகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. |
| 6. | ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கும், துப்பாக்கி உரிமம் புதுப்பித்தலுக்கும் கட்ட வேண்டிய கட்டணத்திலிருந்து முன்னாள் படைவீரர்கள் விலக்களிக்கப்பட்டுள்ளனர். |
| 7. | தமிழ்நாட்டில் வாகனங்களுக்கு வழங்கப்படும் தேசிய பெர்மிட் எண்ணிக்கையில் 10% முன்னாள் படைவீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. |
| 8. | பெட்ரோல் / மண்ணெண்ணெய் மற்றும் எரிவாயு முகமைகள் பெற்றிட பிரத்தியேக ஒதுக்கிடு |
| 9. | இராணுவத்தில் சேர முன்னாள் படைவீரரைச் சார்ந்தோருக்கு முன்னுரிமை |
| 10. | விவசாய கிணற்றுக்கு மின் இணைப்பில் முன்னுரிமை |
| 11. | படைப்பணி சேவையை தமிழ்நாடு அரசுப் பணியுடன் சேர்த்து ஓய்வூதியம் கணக்கிடல் |
| 12. | இராணுவ உபரி வாகனங்களில் சலுகை |

## தமிழக அரசின் கூடுதல் சிறப்புச் சலுகைகள்

| |
|---|
| ஈன்றெடுத்த இரண்டு / ஒரே மகனை, மகளை இராணுவப் பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ஊக்க மானியம் வழங்கப்படுகிறது |

| |
|---|
| போரில் உயிர் நீத்த மற்றும் படைப்பணியில் இறந்துவிட்ட படைவீரர்களின் வாரிசுதாரர் ஒருவருக்கு கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. |

| |
|---|
| போரில் உயிர் நீத்த படைவீரரின் வாரிசுகளுக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் மத்திய அரசின் தனி ஒதுக்கீடு உள்ளது. |

## மத்திய அரசுத் துறை வழங்கும் சலுகைகள் (KSB /DGR)

| |
|---|
| வீர விருது பெற்ற படைவீரர் / முன்னாள் படைவீரர் / போர் விதவையர் / ஊனமுற்ற படைவீரருக்கு தொலைபேசி இணைப்பில் முன்னுரிமை |
| போர் வீரர் விதவையயருக்கு ரயிலில் பயணம் செய்ய 75% கட்டணச் சலுகை |
| PVC, AC, MVC, KC, VC & SC விருது பெற்ற படைவீரர் / முன்னாள் படைவீரர் / விதவையருக்கு முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு (குளிர்சாதன வசதியுடன் கூடியது)களில் ரயிலில் இலவச பயண வசதி. |
| போரில் இறந்த படை அதிகாரிகளின் விதவையர், PVS, MVC, VC மற்றும் KC விருது பெற்றவர் மற்றும் 1962, 1965, 1971 போர்கள் மற்றும் இந்திய அமைதிப்படையில் காயமுற்று விடுவிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு வான் பயணத்தில் 75% சலுகை |

## மத்திய பாதுகாப்பு அமைச்சகம் மூலம் வழங்கும் சலுகைகள் (அவில்தார் பதவி தரம் வரை )

| | |
|---|---|
| (i) | வயது முதிர்ந்த முன்னாள் படைவீரர் / விதவையர்க்கு ரூ.1,000/– பிரதி மாதம் (இரண்டு ஆண்டுகளுக்கு) வழங்கப்படுகிறது |
| (ii) | முன்னாள் படைவீரர் / விதவையரின் மகளுக்கும், விதவை மறுமணத்திற்கும் திருமண மானியம் ரூ.16,000/– வழங்கப்படுகிறது |
| (iii) | முன்னாள் படைவீரர் / விதவையருக்கு வீட்டினை பழுது பார்க்க ரூ.20,000/– வழங்கப்படுகிறது |
| (iv) | முன்னாள் படைவீரர் / விதவையரின் குழந்தைகளுக்கு (பட்டப்படிப்பு வரை) படிப்பிற்கான செலவினம். ரூ.1000/– வீதம் பிரதிமாதம் வழங்கப்படுகிறது (விதவையருக்கு பட்டமேற்படிப்பு வரை) |

| | |
|---|---|
| (v) | முன்னாள் படைவீரர் / விதவைகளுக்கும், 100% ஊனமுற்ற மற்றும் அனாதை மகள்களுக்கும் (அனைத்து பதவிதரம் வரை) இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.20,000/– வழங்கப்படுகிறது. |
| (vi) | ஊனமுற்ற முன்னாள் படைவீரருக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டி வழங்கப்படும். |
| (vii) | அனாதையாக உள்ள திருமணமாகாத மகள் மற்றும் 21 வயதிற்குட்பட்ட மகனுக்கு மாதம் ரூ.1000/– வீதம் மானியம். |
| (viii) | விதவையருக்கு பயிற்சி உதவித்தொகை ரூ.20,000/– (ஒரு முறை) |
| (ix) | தேசிய பாதுகாப்பு அகாடமியில் சேர மாதம் ரூ.1,000/– மானியம் |
| (x) | ஊனமுற்ற குழந்தைகளுக்கு மாதம் ரூ.1,000/– மானியம் |
| (xi) | ஈமச்சடங்கு மானியம் ரூ.5,000/– |
| (xii) | மருத்துவ மானியம் ரூ.30,000/– |

## <u>பிற நல நிதிகள் மூலம் அளிக்கப்படும் உதவிகள்</u>

தரைப்படை வீரர் மனைவியர் நல சங்கம், புதுடெல்லி, ஊனமுற்ற படைவீரர், விதவையர் மற்றும் ஆதரவற்றோர் நல நிதி மூலம் முப்படைவீரர்களின் விதவைகளுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன

இராணுவ மைய நல நிதி, மதராஸ் ரெஜிமென்ட் ஓய்வூதியருக்கான திருவாதிரை நிதி, இந்திய வான்படை நலநிதி மூலம் பல்வேறு நிதியுதவிகள் முன்னாள் படைவீரர் மற்றும் விதவைகளுக்கு வழங்கப்படுகின்றன.

முன்னாள் படைவீரர் சுகாதார பங்களிப்புத் திட்டத்தில் (ECHS) பயன்பெற தகுதி அற்றோருக்கு பிரத்தியேக நிதியுதவி வழங்கப்படுகிறது.

இராணுவக் காப்பீட்டுத் திட்டத்தில் பயனுறத் தகுதியற்றவர்களுக்கு மட்டும் மருத்துவக் காரணங்களினால் ஏற்படும் செலவினம் ரூ.15,000/– (அதிகபட்சமாக) வழங்கப்படுகிறது

போரில் பார்வை இழந்த முன்னாள் படைவீரர்களுக்கு மட்டும் புனித டங்ஸ்டன் நிதியுதவி வழங்கப்படுகிறது

**தொகுப்பு நிதியின் மாநில மேலாண்மைக் குழு**

தொகுப்பு நிதியிலிருந்து பல்வேறு சலுகைகள் மற்றும் நிதியுதவிகள் வழங்கிட இக்குழு மேதகு ஆளுநர் அவர்களை தலைவராகக் கொண்டு செயல்படுகிறது. மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் இதனில் உறுப்பினராக செயல்படுகிறார்.

**தொகுப்பு நிதியின் நிலையான உட்குழு**

தொகுப்பு நிதியிலிருந்து பல்வேறு சலுகைகள் மற்றும் நிதியுதவிகள் வழங்கிட இத்துணைக்குழு தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களை தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

**மாநில முப்படை வீரர்கள் வாரியம்**

மேதகு ஆளுநர் அவர்களை புரவலராகக் கொண்டு மாண்புமிகு முன்னாள் படைவீரர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மாநில அளவில் முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் நலன்களைப் பேணிட, மாநில முப்படைவீரர்கள் வாரியம் செயல்பட்டு வருகிறது. இதனில் தலைமைச் செயலாளர் துணைத் தலைவராகவும் அலுவல் வழி உறுப்பினர்களாக மத்திய மாநில அரசு அலுவலர்கள் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களாக ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், ஒரு சட்டமன்ற உறுப்பினர், மூன்று முன்னாள் படை அலுவலர்கள் மற்றும் மாவட்ட முப்படை வீரர்கள் வாரியத்தின் துணை தலைவர்கள் இணைந்து செயல்படுவர். இக்குழு ஆண்டிற்கு ஒரு முறை கூடும்.

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலநிதி நிர்வாகக் குழு**

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலநிதியிலிருந்து வழங்கப்படும் பல்வேறு சலுகைகள் / கட்டுமான செலவினங்கள் குறித்தான நிதி நிர்வாக முடிவுகளை மேற்கொள்ள முன்னாள் படைவீரர் நல இயக்குநர் அவர்களை தலைவராகவும், தென் மண்டல இராணுவ புனரமைப்பு இயக்குநர் அவர்களை உறுப்பினராகவும் இணை இயக்குநர் அவர்களை செயலாளராகவும் கொண்டு இக்குழு செயல்படுகிறது.

**மாவட்ட முப்படைவீரர்கள் வாரியம்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட முப்படைவீரர்கள் வாரிய குழு முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் நலன்களை கலந்தாலோசித்து செயல்படுத்திட செயல்படுகிறது. இதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைவராகவும், ஓய்வு பெற்ற இராணுவ அலுவலர் உப தலைவராகவும், நான்கு முதல் ஆறு உறுப்பினர்கள் வரை முன்னாள் படைவீரர்களும் இணைந்து செயல்படுவர். இதனில் அனைத்து மாவட்ட நிலை அலுவலர்களும் அலுவல் உறுப்பினராக இருப்பர். இக்குழு ஆண்டிற்கு ஒரு முறை கூடும்.

**கோட்ட அளவில் முப்படை வீரர்கள் குழு**

ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும் வருவாய் கோட்டாட்சியரை தலைவராகவும், ஓய்வு பெற்ற இளநிலை படை அலுவலரை உபதலைவராகவும், முன்னாள் படைவீரர்களை உறுப்பினராகவும் கொண்ட குழு முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர் நலன்கள் குறித்து விவாதிக்க செயல்படுகிறது. இதனில் கோட்ட நிலையிலான அலுவலர்கள் அலுவல் உறுப்பினர்களாக இருப்பர். இக்குழு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூடும்.

இக்குழுக்களில் உறுப்பினராக மாவட்ட அலுவலகங்களை அணுகவும்.

<u>தமிழ்நாட்டில் உள்ள ECHS பாலிகிளினிக் பட்டியல்</u>

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | வகை | தொலைபேசி |
|---|---|---|---|
| 1. | ECHS பாலிகிளினிக், ஆர்மி வெட்டரன்ஸ் வெல்ஃபேர் காம்ப்ளக்ஸ், வி ஐ டி அஞ்சல், வேலூர் – 632014 | A | 0416-2249252<br>0416-2249253 |
| 2. | ECHS பாலிகிளினிக், மே/பா மிலிட்டரி ஹாஸ்பிட்டல் (சென்னை),, டிபன்ஸ் காலனி ரோடு, சென்னை–600032. | B | 044-22314274<br>044-22330790 |
| 3. | ECHS பாலிகிளினிக், மே/பா மிலிட்டரி ஹாஸ்பிட்டல் (ஆவடி), எச் வி எஃப் ரோடு, சென்னை – 600 054. | C | 044-26840270<br>044-26840147 |
| 4. | ECHS பாலிகிளினிக், புதிய எண்.53, பழைய எண்.15, 10வது தெரு, காந்தி நகர், திருவண்ணாமலை – 606 602. | C | 04175-221163 |
| 5. | ECHS பாலிகிளினிக், எண்.10/1, கீழ் ஒட்டிவாக்கம், திம்மராஜன்பேட்டை அஞ்சல், காஞ்சிபுரம்–630 601. | C | 044-27257385 |
| 6. | ECHS பாலிகிளினிக், எண்.76, சீத்தாராமன் நகர், புதுப்பாளையம்,கடலூர் – 607 001. | D | 04142-294747 |
| 7. | ECHS பாலிகிளினிக், எண்.35&36 ஆறுமுகம் லே அவுட், கே.கே. ரோடு, விழுப்புரம் – 605 602. | D | 04146-226015<br>04146-222148 |
| 8. | ECHS பாலிகிளினிக், எண்.40,வனத்தான் சின்னப்பர் கோயில் தெரு, செயின்பால் பேட்டை, லாஸ்பேட்டை, புதுச்சேரி – 605 008. | D | 0413-2257026 |
| 9. | ECHS பாலிகிளினிக், ஃபோர்ட் செயின்ட் ஜார்ஜ், சென்னை–600 009. | D | 044-25673344 |
| 10. | ECHS பாலிகிளினிக், முனிசிபல் ஆபிஸ் ரோடு, விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர்–636 125. | C | 04563-263534 |
| 11. | ECHS பாலிகிளினிக், எண்.47, கலை நகர், 2வது பிரதான சாலை, பழைய நத்தம் ரோடு, மதுரை – 625 017. | C | 0452-2640410 |
| 12. | ECHS பாலிகிளினிக், எண்.159, மாதவன் சாலை, கே கே நகர், திருச்சிராப்பள்ளி – 21. | C | 0431-2459945 |
| 13. | ECHS பாலிகிளினிக், எண்.194/2, ஜவான்ஸ் பவன், முதல் தளம், பாளையம்கோட்டை, திருச்செந்தூர் ரோடு, திருநெல்வேலி – 627 002. | C | 0462-2584864 |
| 14. | ECHS பாலிகிளினிக், மே/பா. ஏ.எஃப் ஹாஸ்பிட்டல், ரெட் ஃபீல்ஸ், 407, ஏ எஃப் ஸ்டேஷன், கோயம்புத்தூர் – 18. | C | 0422-220233 |
| 15. | ECHS பாலிகிளினிக், எண்.1/307, மகாலஷ்மி நகர், முருகன் கோயில் எதிரில், சென்னை சாலை, கிருஷ்ணகிரி – 635 001. | C | 04343-291110 |
| 16. | ECHS பாலிகிளினிக், எண்.10/12, சின்னயாபாளை ரோடு, மரவனேரி, சேலம்–636 007. | C | 0427-2414707 |
| 17. | ECHS பாலிகிளினிக், எண்.28, பெருமாள் மேற்கு தெரு, நாகப்பட்டினம் – 611 001. | D | 04365-220907 |
| 18. | ECHS பாலிகிளினிக், எண்.23, இடது பிரிவு, முதல் தளம், ஜவான்ஸ் பவன் காம்ப்ளக்ஸ், ரெயில்வே நிலையம் அருகில், தஞ்சாவூர்– 613001. | D | 04362-275340 |
| 19. | ECHS பாலிகிளினிக், எண்.6–1–40 பி1, பழைய ஹோட்டல் ஹில்டா பில்டிங், புதிய தண்ணீர் தொட்டி, பழனிசெட்டிப்பட்டி,தேனி – 625 531. | D | 04546-265415 |
| 20. | ECHS பாலிகிளினிக், எண்.4/552, திருமல்லிக் கேணி நகர், டாக்டர் அப்துல் கலாம் ரோடு, சென்னமாணிக்கம்பட்டி அஞ்சல்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (SO), திண்டுக்கல் – 624 004. | D | 0451-2460341 |
| 21. | ECHS பாலிகிளினிக், நிர்மல் வில்லா, எண்.531, எம் எஸ் ரோடு, வெட்டுர்ணி மடம், நாகர்கோயில் – 632 003. | D | 04652-223050 |
| 22. | ECHS பாலிகிளினிக், எண்.14, 4வது தெரு, சிதம்பர் நகர், தூத்துக்குடி – 628 008. | D | 0461-2390317 |
| 23. | ECHS பாலிகிளினிக், வெலிங்டன் அஞ்சல், நீலகிரி – 643 231. | D | 0423-2200801 |
| 24. | ECHS பாலிகிளினிக், மே/பா. கப்பற்படை அலுவலகம், போர்ட் பிளேர் – 744 102. | D | 03192-225062<br>248221, 225259 |
| 25. | ECHS பாலிகிளினிக், எண்.1/18, புதிய எண்.21, 3வது தெரு, வெங்கடேஷ் நகர், செட்டி மண்டபம், கும்பகோணம் – 610 001. | D | |

**தமிழ்நாட்டிலுள்ள ECHS பாலிகிளினிக் மூலமாக மருத்துவ சிகிச்சை பெற அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள்.**

| சிறப்பு சிகிச்சையின் தன்மை | மாவட்டம் | மருத்துவமனையின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|
| பொது | சென்னை | ஹைபீம் சிடி ஸ்கேன் சென்டர், 56, அரத்தூண் ரோடு, சென்னை – 13. |
| | | ஆர்.ஜி.ஸ்டோன் யூரோலாஜிக்கல் ரிசர்ச் சென்டர், 391/392, அண்ணா சாலை, சைதாப்பேட்டை, சென்னை–15. |
| | | குளோபல் மருத்துவமனை, ஹெல்த் சிட்டி, சென்னை. |
| | | அல்பா பிசியோதெரபிக் சென்டர், 56வது தெரு, நந்தனம் விரிவாக்கம், சென்னை – 35. |
| | காஞ்சிபுரம் | மியாட் ஆஸ்பிட்டல், 4/112, மவுண்ட் பூந்தமல்லி ரோடு, மணப்பாக்கம், சென்னை–89. |
| | திருச்சிராப்பள்ளி | மாருதி ஹாஸ்பிட்டல், தென்னூர், திருச்சிராப்பள்ளி – 620 017. |
| | | சீஷார்ஸ் ஹாஸ்பிட்டல், (கேஎம்சி ஸ்பெஷல் ஹாஸ்பிட்டல்) 6, ராயல் ரோடு, திருச்சிராப்பள்ளி – 01. |
| | | குழந்தை யேசு மருத்துவமனை, அஞ்சல் பெட்டி எண்.17, திருச்சிராப்பள்ளி – 01. |
| | சேலம் | சண்முகா ஹாஸ்பிட்டல் & எஸ் ஜி ஐ, 24, சாரதா கல்லூரி ரோடு, சேலம். |
| | | வினாயகா மிஷன் மருத்துவமனை, என்எச்.47, சங்ககிரி மெயின் ரோடு, சின்ன சீரகபாடி, சேலம் – 636 308. |
| | | எஸ் கே எஸ் மருத்துவமனை, அழகாபுரம், சேலம் – 636 004. |
| | கிருஷ்ணகிரி | ஜீவா ஹாஸ்பிட்டல்ஸ், 269 ஜி. பெங்களூர் ரோடு, கிருஷ்ணகிரி – 635 001. |
| | வேலூர் | ஸ்ரீநாராயணி ஹாஸ்பிட்டல் & ரிசர்ச் சென்டர், திருமலைகோடி அரியூர் (அஞ்சல்), வேலூர் – 632 055. |
| | கடலூர் | பாண்டிச்சேரி இன்ஸ்டிடியூட் ஆப் மெடிக்கல் சயின்சஸ், கணபதி செட்டிகுளம், காலாப்பட்டு, புதுச்சேரி – 605 014. |
| | பாண்டிச்சேரி | ஸ்ரீமணக்குள வினாயகர் மருத்துவக் கல்லூரி & மருத்துவமனை, கலிதீர்த்தாள் குப்பம், மதகடிப்பட்டு, புதுச்சேரி – 605107. |
| | திருவண்ணாமலை | ரமண மகரிஷி ரங்கம்மாள் மருத்துவமனை, திருவண்ணாமலை. |
| | திருவள்ளூர் | பிரண்ட் லைப்லைன் பிரைவேட் லிட், ஆர்.30 சி அம்பத்தூர் இண்டஸ்ரியல் எஸ்டேட் ரோடு, முகப்பேர், சென்னை–101. |
| | திருநெல்வேலி | கேலக்ஸி ஹாஸ்பிட்டல், 110சி/20/1 வடக்கு பைபாஸ் சாலை, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி–627 003. |
| | | ஷிஃபா ஹாஸ்பிட்டல், 82, கைலாசபுரம் நடுத்தெரு சந்திப்பு, திருநெல்வேலி – 1. |
| | தூத்துக்குடி | ஏவிஎம் ஹாஸ்பிட்டல், 135, பாளையங்கோட்டை ரோடு, தூத்துக்குடி – 628 003. |
| | நாகர்கோவில் | ஜெயசேகரன் மருத்துவமனை, 1159, கேபி ரோடு, நாகர்கோவில் – 629 003. |
| | தேனி | கிருஷ்ணம்மாள் நினைவு மருத்துவமனை, 293, பெரிய குளம் ரோடு, தேனி – 625 531. |
| | திண்டுக்கல் | சிட்டி ஹாஸ்பிட்டல், 4/361, காந்தி நகர், திருச்சிராப்பள்ளி ரோடு, திண்டுக்கல் – 644 005. |
| | | ராஜராஜேஸ்வரி நர்சிங் ஹோம், திருவள்ளுவர் சாலை, பஸ்நிலையம் அருகில், ஸ்பென்சர் நகர், திண்டுக்கல் – 624003. |
| | கோயம்பத்தூர் | கொங்குநாடு மருத்துவமனை, 79, 11வது தெரு, டாடாபாத், கோயம்புத்தூர்–641 012. |
| | | கங்கா மெடிக்கல் சென்டர், 2, சொர்ணாம்பிகா லே அவுட், ராம் நகர், கோயம்புத்தூர் – 641 009. |
| | | பிஎஸ்சி ஹாஸ்பிட்டல்ஸ், அவினாசி ரோடு, பீளமேடு, கோயம்புத்தூர். |

| சிறப்பு சிகிச்சையின் தன்மை | மாவட்டம் | மருத்துவமனையின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|
| கண் மருத்துவம் | சென்னை | டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை, 19, கதீட்ரல் ரோடு, சென்னை–86. |
| | மதுரை | அரவிந்த் கண் மருத்துவமனை, 1, அண்ணா நகர், மதுரை–625 020. |
| | திருச்சிராப்பள்ளி | மகாத்மா கண் மருத்துவமனை, 6, சேஷாபுரம், தென்னூர், திருச்சிராப்பள்ளி – 17. |
| | | ஜோசப் கண் மருத்துவமனை, அஞ்சல் பெட்டி எண்.138, மேலபுதூர், திருச்சிராப்பள்ளி–620 001. |
| | | டாக்டர் கோவிந்தராஜன் கண் மருத்துவனை, 70, ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சிராப்பள்ளி – 620 017. |
| | புதுச்சேரி | அரவிந்தர் கண் மருத்துவமனை, கடலூர் மெயின்ரோடு, புதுச்சேரி – 605 007. |
| | நாகர்கோவில் | பேஜன்சிங் கண் மருத்துவமனை, 2/1212 சிஎம்எஸ் ரோடு, நாகர்கோவில் – 3. |
| | தேனி | அரவிந்த் கண் மருத்துவமனை, 371, பெரிய குளம் ரோடு, தேனி – 625 531. |
| | கோயம்புத்தூர் | ஐ பவுண்டேஷன், 582, ஏடிபி ரோடு, ஆர் எஸ் புரம், கோயம்புத்தூர் – 14. |
| | | அரவிந்த் ஐ ஹாஸ்பிட்டல், அவினாசி ரோடு, சிவில் ஏரோடிராம் (அஞ்சல்) கோயம்புத்தூர் – 14. |
| | | அரவிந்த் கண் மருத்துவமனை, அவினாசி ரோடு , கோயம்புத்தூர் – 14. |
| பல் மருத்துவம் | சென்னை | கிரிஸ்டி டெண்டல் ஹாஸ்பிட்டல், 1, கே.பி.நகர் முதல் குறுக்கு, புனித வேளச்சேரி, சென்னை– 42. |
| ரேடியோ டயக்னஸிஸ், இமேஜிங், சிடி ஸ்கேன், எம்.ஆர்.ஐ. | சென்னை | லிபர்டி ஹை ஸ்கேன்ஸ் பிரைவேட் லிட், 149/150, டிடிகே ரோடு, ஆல்வார் பேட்டை, சென்னை–18. |
| சிறுநீரக இயல் | மதுரை | மதுரை கிட்னி சென்டர் & டிரான்ஸ்பிளாண்ட்டேஷன் ஆராய்ச்சி நிறுவனம், 6/6, பி2 சிவகங்கை சாலை, மதுரை – 625 020. |
| ரேடியோ டயக்னஸிஸ் | கன்னியாகுமரி | இந்தியன் எம் ஆர் டயக்னஸ்டிக் & ரிசர்ச் லிட், 552ஏ, எம் எஸ் ரோடு, வெட்டூர்ணி மடம், நாகர்கோவில் –3. |
| கேன்சர் | சென்னை | பேட்டர்சன் கேன்சர் விஜயா ஹெல்த் சென்டர், 175, என்.எஸ்.கே. சாலை, வடபழனி, சென்னை– 26. |
| முடக்கு நீக்கியல் | சென்னை | பிரேம் ஸ்பெஷாலிட்டி மையம், பைரவி அபார்ட்மெண்ட்ஸ், எம்.ஜி.ரோடு, சாஸ்திரி நகர், சென்னை – 41. |

# முன்னாள் படைவீரர் நலத்துறை அலுவலகங்களின் விபரம்

| | | |
|---|---|---|
| சென்னை,முன்னாள் படைவீரர் நல இயக்ககம் *<br>சென்னை (சைதாப்பேட்டை)<br>கோயம்புத்தூர் *<br>கடலூர் * | 044-26691342<br>044-22350780<br>0422-2214107<br>04142–294732 | exweldte@tn.gov.in<br>exwelchn@tn.gov.in<br>exwelcbe@tn.gov.in<br>exwelcud@tn.gov.in |
| திண்டுக்கல் (கொடைக்கானலில் தங்குமிட வசதி உள்ளது) * | 0451–2460086 | exweldgl@tn.gov.in |
| ஈரோடு * | 0424–2263227 | exwelerd@tn.gov.in |
| காஞ்சிபுரம் | 044–22262023 | exwelkpm@tn.gov.in |
| கன்னியாகுமரி (நாகர்கோவிலில் தங்குமிட வசதி உள்ளது) | 04652–243515 | exwelkkm@tn.gov.in |
| கிருஷ்ணகிரி | 04343–236134 | exwelkgi@tn.gov.in |
| மதுரை * | 0452–2308216 | exwelmdu@tn.gov.in |
| நாகப்பட்டினம் | 04365–253042 | exwelngp@tn.gov.in |
| புதுக்கோட்டை | 04322–221593 | exwelpdk@tn.gov.in |
| இராமநாதபுரம் | 04567–230045 | exwelrmd@tn.gov.in |
| சேலம் | 0427–2410903 | exwelslm@tn.gov.in |
| சிவகங்கை * | 04575–240483 | exwelsvg@tn.gov.in |
| தஞ்சாவூர் * | 04362–230104 | exweltnj@tn.gov.in |
| நீலகிரி (உதகமண்டலத்தில் தங்குமிட வசதி உள்ளது) * | 0423–2444078 | exwelnlg@tn.gov.in |
| தேனி | 04546–252185 | exwelthn@tn.gov.in |
| தூத்துக்குடி * | 0461–2321678 | exweltut@tn.gov.in |
| திருச்சிராப்பள்ளி | 0431–2410579 | exweltry@tn.gov.in |
| திருநெல்வேலி * | 0462–2560440 | exweltnv@tn.gov.in |
| திருவள்ளூர் | 044-27663163 | exweltlr@tn.gov.in |
| திருவண்ணாமலை | 04175-233047 | exweltvm@tn.gov.in |
| வேலூர் | 0416–2220432 | exwelvel@tn.gov.in |
| விழுப்புரம் | 04146–220524 | exwelvpm@tn.gov.in |
| விருதுநகர் (ஸ்ரீவில்லிபுத்தூரில் தங்குமிட வசதி உள்ளது) * | 04563–260382 | exwelvnr@tn.gov.in |

* மாவட்டங்களில் முன்னாள் படைவீரர் மையம் அல்லது படைவீரர் மாளிகைகளில் தங்குவதற்கு அம்மாவட்ட தொலைபேசி எண்கள் / மின்னஞ்சல்களில் சென்னையில் முன்னாள் படைவீரர் நல இயக்ககம் மற்றும் மாவட்டங்களில் முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களை அணுகவும்.

**<u>படைப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட உடன் குடிமைப்பணியில் சேரவேண்டும் என விரும்புவோர் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தை அணுகலாம்.</u>**

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தில் பெயர் பதிவு செய்த முன்னாள் படைவீரர்கள் மத்திய புனரமைப்பு இயக்குநரகத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் அல்லது தமிழ்நாடு குறைந்தபட்ச ஊதியத்துடன் தற்காலிகப் பணிகளில் ONGC, BSNL, IOC, தமிழ்நாடு மின்சார வாரிய கழகங்கள், தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகங்கள் உள்ளிட்ட மத்திய மற்றும் மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களிலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசுத் துறைகளிலும் உடனே பணியமர்த்தப்படுவார்கள். இவர்களுக்கு இலவசப் பயிற்சிகளும், காப்பீடு, மருத்துவப்படி, பணிக்கொடை, இலவசச் சீருடை உள்ளிட்ட சலுகைகளும் உண்டு. தற்போது 9200 முன்னாள் படைவீரர்கள் இந்நிறுவனத்தில் பணிபுரிகின்றனர்.


தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம்,<br>
2இ, வடக்கு மாட வீதி, திருநகர் காலனி, சைதாப்பேட்டை,<br>
சென்னை – 600 015.

மின்னஞ்சல் : texco@dataone.in<br>
இணையதள முகவரி: www.texco.com<br>
தொலைபேசி: 044-22352947 , 22301792<br>
கைபேசி : நிர்வாக இயக்குநர் – 9445804000<br>
பொது மேலாளர் – 9443103268, 9445002317